(3) THE MADRAS PLANTATIONS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1956 (L.A. BILL NO. 42 OF 1956).

* THE HON. SRI M. A. MANICKAVELU : ஐயா, இந்த Madras Plantations Agricultural Income-tax (Amendment) மசோதா கீழ் சட்டச் சபையிலே நிறைவேற்றப்பட்டது. அதை இங்கும் பரிசீலனை செய்து நிறை வேற்றும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1956 (L.A. Bill No. 42 of 1956), as passed by the Legislative Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1 was put and carried.

The Preamble was put and carried.

* THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மசோதாவை சபை அங்கீகரிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்த மசோதா எதற்காக கொண்டுவரப்பட்டது என்று சொல்ல விட்டுப் போய்விட்டது. மத்திய அரசாங்கம் புதிய நாணய முறையைக் கொண்டுவருவதற்காக "நயா பைசா" சம்பந்தமாகச் சட்டம் நிறைவேற்றி யிருக்கிறது. அந்தச் சட்டம் மத்திய அரசாங்கத்தாரால் நிறைவேற்றப் பட்டிருந்தாலும், ராஜ்யங்களிலே அமுல் நடத்தப்படவேண்டுமானால், இங்கேயும் அதைச் சட்டபூர்வமாகச் செய்யவேண்டும்.

நயா பைசா என்பதைப் பற்றிச் சொல்லவேண்டுமானால், ஒரு ரூபாய்க்கு 100 நயா பைசா என்ற முறையில் வருகிறது. 5, 10, 25, 50, 100 என்ற தசாம்ச முறையில் இது கணக்கிடப்படுகிறது. நயா பைசா முறை வருவதால், பழைய பைசாக்கள் பழக்கத்தில் இல்லாமல் உடனடியாக மறைந்து விடாது. அதுவும் சில வருஷங்கள் வரை இருக்கும். சில வருஷங்கள் இரண்டு வித பைசாக்களும் இருக்கும். பிறகு தான் பழைய பைசாக்கள் மறைந்து விடும்.

SRI K. BALASUBRAMANYA AYYAR : நயா பைசா என்பது எப்படி இருக்கும் என்று கனம் அமைச்சரவர்கள் சொல்ல வில்லையே !

THE HON. SRI M. A. MANICKAVELU : நானும் அதைப்பார்க்க வில்லை !

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1956 (L.A. Bill No. 42 of 1956), as passed by the Legislative Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

---

* Printed as Appendix V on pages 436–437 infra.